# Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of Sessions Judge, Magalir Neethi Mandram,
(Fast Track Mahila Court), Villupuram.

Sessions Case No.248-2018

Deposition of witness No. for Prosecution / Defence / Court

Name : ஜீவனுஷ் அ.சா.4 Lw.9

Father's Name : அப்துல்வாஹித்

Village : லட்சுமிபுரம், ஜம்ஜம் நகர், ஒரத்தூர் மதுரா

Taluk : விக்கிரவாண்டி வட்டம்

Caste :

Calling :

Religion :

Age : 41

Time : 11.00 am - 11.10 am

Solemnly affirmed in accordance with the provisions of X of 1873 on the 04th day March 2021.
04.03.2021

முதல் விசாரணை.

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் ஹோட்டலில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும், பார்த்திருக்கிறேன். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் சாயங்காலம் 7 மணிக்கு நான் டீ சாப்பிட்டு இன்ட்டரவல் போகலாம் என்று போனேன். அப்போது இரண்டு பேர் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். மும்தாவும், விக்னேஷும் நின்று பேசிக்கொண்டு இருந்தார்கள். கூச்சமே இல்லாமல் பொது இடத்தில் நின்று பேசிக்கொண்டிருக்கிறார்களே என்று பார்த்துவிட்டு நானும், ஹக்கீம் என்பவரும் பார்த்துவிட்டு வந்துவிட்டோம். மறுநாள் பார்த்தால் ஓடையில் ஒரு பிரேதம் கிடப்பதாக சொன்னார்கள். நான் போய் பார்த்தேன். பார்க்கும்போது ஒரு பெண்ணின் பிரேதம் இருந்தது. ஊர்க்காரர்கள் போலீசுக்கு போன் செய்து போலீசும் வந்து பார்த்தார்கள். அங்கு கிடந்தது மமுதாவின்

பிரேதம். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>குறுக்கு விசாரணை</u>

நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது. முந்தையநாள் இரவு வந்து கொடுத்துவிட்டு போனார்கள். விக்கிரவாண்டி காவல்நிலையத்தில், என் பெயரையோ, என் அப்பா பெயரையா ஒருபோதும் கொடுத்ததில்லை. அதேபோல் ஹக்கீம் என்பவரை தெரியும் என்று போலீசாரிடம் சொல்லவில்லை. நீதிமனற்த்திலிருந்து சம்மன் வந்தபிறகு தான் இந்த வழக்கில் நான் சாட்சி என்று தெரியும் என்றால் ஆமாம். அதற்கு முன்பாக இந்த வழக்கு சம்மந்தமாக எந்த காலத்திலும் காவல்நிலையத்திற்கு நான் போனது இல்லை என்றாலும், இந்த வழக்கு சம்மந்தமாக வாக்குமூலம் கொடுத்ததில்லை என்றால் சரிதான். மமுதா யார், அவரை எப்படி தெரியும், அவர் கணவர் யார் என்ற விவரங்கள் எனக்கு எப்படி தெரியும் என்று போலீசிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் ஆஜர் எதிரியின் பெயரும், அவர் அப்பா பெயரும் தெரியும். நான் போய் பார்க்கும்போது மமுதாவின் பிரேதம் அழுகியிருந்ததா, எந்த நிலையில் இருந்தது என்று போலீசிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றாலும், இன்று காலையில் போலீசார் என்னிடம் ஒரு சம்மனை கொடுத்துவிட்டு, வாக்குமூலத்தை படித்து காண்பித்தார்கள் என்றாலும், நீதிமன்றத்திறகு வெளியே ஆஜர் எதிரியை காண்பித்து இவர் தான் எதிரி விக்னேஷ் என்று அடையாளம் காட்டி, இவ்வாறு தான் சாட்சியம் அளிக்கவேண்டும் என்று போலீஸ் சொல்லிக்கொடுத்தார்கள் என்றாலும், சரியல்ல.